Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 12

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | விசுவாவசு மார்கழி 1965 டிசம்பர் | இதழ் 12

உள்ளுறை

பத்திராசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணு 4

சமாஜச் செய்திகள்

சமாஜப் பொதுக்கூட்டம்

சென்னை மயிலாப்பூர் கிழ மாட வீதியிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 25—12—65 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ ஆண்டு அறிக்கையையும் இவ்யாண்டு வரவு செலவுக் கணக்குகளையும் ஆமோதிக்க சமாஜப் பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு உறுப்பினர் நிறைவெண் (Quorum) இல்லாவிட்டால் மேற்படி விஷயங்களை ஆமோதிக்க மேற்குறித்த இடத்திலேயே மறுநாள் 26—12—65 ஞாயிற்றுக்கிழமை காலை அதே நேரத்தில் சமாஜ விதிகளின்படி வருபவர்களைக் கொண்டு, அக்கூட்டம் நடத்தப் பெறும். பொது உறுப்பினர் யாவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். (செயலாளர்)

“சைவர் என்று சொல்லப் பெறுபவர் சிவதீட்சை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம்” எனச் சாத்திரங்கள் வலியுறுத்துகின்றன. இதுவரையிலும் சிவதீட்சை பெற்றுக் கொள்ளா அன்பர்களின் வசதியை முன்னிட்டு 31—12—65, 1—1—66, 2—1—66 நாட்களில் நிகழும் சைவ சித்தாந்த மகாசமாஜ வைர விழாவின்போது சூரியனார் கோயில் மகா சன்னிதானமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் அருள் கூர்ந்து தீட்சை செய்து வைக்க இசைந்துள்ளார்கள். யாவரும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தித் தீட்சை பெற்று விளங்க வேண்டுகிறோம். (தலைவர்)

ஒரு அறிவிப்பு

நம் சைவ சித்தாந்த கருத்துக்களை ஆங்கிலம் படித்தவர்கள் நன்குணர்ந்து தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தும் நிமித்தம் ஆங்கிலத்தில் “சைவ சித்தாந்தம்” என்ற முத்திங்களிதழை சமாஜத்தின் மூலம் ஆரம்பிக்க விருக்கின்றோம். அதன் முதல் இதழ் சமாஜ வைர விழாவில் வெளியிடப் பெறும். சமாஜ உறுப்பினர்கள், தங்கள் பிள்ளைகள், அல்லது ஆங்கிலம் தெரிந்த நண்பர்கள் முதலியவர்களுக்குக் கூறி இதற்குச் சந்தாக்கள் நிறையச் சேர ஆவனசெய்ய வேண்டுகிறோம். ஆங்கிலச் சைவ சித்தாந்த இதழாசிரியர் திரு நல். முருகேச முதலியார் அவர்கள் B.A., ஆவர். (சமாஜத் துணைத்தலைவர்) ஆண்டுக்கு ரூ. 5/– சந்தா ஆகும். (துணையாசிரியர்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(துவக்கம் - 1905 — பதிவு - 1915)

60 - ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சைவர் மாநாடும்

இடம்: சிதம்பரம் (தென்னார்க்காடு மாவட்டம்)

நாட்கள்: (வெள்ளி) 31-12-'65, (சனி) 1-1-'66, (ஞாயிறு) 2-1-'66

அறிக்கையும் அழைப்பும்

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே "

அன்புடையீர் !

உலகம் யாவும் செந்நெறியே திகழ ஆலவாயண்ணல் புகழைப் பரப்பும் நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **60ஆம் ஆண்டு நிறைவு விழாவும்,** அதன் அங்கமாகச்

சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர், சைவப் புலவர் மாநாடுகளும், நிகழ் விசுவாவசு ஆண்டு, மார்கழித் திங்கள் கசு, கள, கஅ-ஆம் நாள் (31-12-65, 1-1-66, 2-1-66) வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், சிதம்பரத்தில் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் பிற்காணும் நிகழ்ச்சி முறைப்படி நிகழும்.

உயர்திரு. டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ். (தென் ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர்) அவர்கள் கொடியேற்றி வைப்பார்கள்.

தமிழ் நாடு சட்ட சபைத் தலைவர் - உயர்திரு. எஸ். செல்லபாண்டியன், பி.ஏ., பி.எல்., அவர்கள், மாநாட்டைத் திறந்து வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

அருள்மொழி அரசு - திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், மதுரை ஆலை அதிபர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி. இராதா தியாகராசன் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், சென்னை மாநிலக்கல்லூரி வடமொழிப் பேராசிரியர் - உயர்திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம்.ஏ., எல்.டி. அவர்கள் சைவ இளைஞர் சைவப் புலவர் மாநாட்டிற்கும், தலைமை தாங்கிச் சிறப்பிப்பார்கள்.

அறிஞர் பெருமக்கள் பலர் மூன்று நாட்களிலும் சைவ சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

சைவ அன்பர்கள் யாவரும் வந்திருந்து மாநாடுகளைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

சென்னை
1—12—'65 } இங்ஙனம் :

கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு)
சமாஜத் தலைவர்

இராவ்சாகிப் நல். முருகேச முதலியார்,
தி. கி. நாராயணசாமி நாயுடு, சமாஜத் துணைத் தலைவர்கள்
கோ. நீ. சிங்காரவேலு முதலியார்,
மு. நாராயண்சாமி முதலியார்,
சமாஜப் பொதுச் செயலாளர்கள்

வரவேற்புக் குழுவினர்

ஆர். கனகசபை, எம்.பி., வரவேற்புக் குழுத் தலைவர்
எஸ். இரத்தினசாமிச் செட்டியார்,
ஜி. வாகீசம் பிள்ளை,
டாக்டர் கே. அரங்கசாமிப் பிள்ளை, எம்.பி., பி.எஸ்.,
எம். சுப்பராய பிள்ளை, பி.எஸ்சி., பி.எல்.,
இசையரசு - எம். எம். தண்டபாணி தேசிகர்,
எம். இராமலிங்கம் பிள்ளை, (மன்னார்குடி),
துணைத்தலைவர்கள்
என். எம். பொன்னம்பலம் பிள்ளை, பொருளாளர்
பு. ர. சுவாமிநாதன், செயலாளர்
எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை, (ஒரத்தூர்)
க. வெள்ளைவாரணன், துணைச் செயலாளர்கள்

வரவேற்புக் குழுவினர் அலுவலகம் :
நெ. 23, கனகசபை நகர், சிதம்பரம்

சமாஜ அலுவலகம் :
நெ. 12, கிழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4

நிகழ்ச்சி நிரல்

முதல் நாள்: மார்கழி 16 (31-12-'65) வெள்ளிக்கிழமை

காலை 7 மணி: *அம்பலவாணர் வழிபாடு*

காலை 9 மணி முதல் 1 மணி வரை

சைவர் மாநாடு

வைர விழா தொடக்கம். இறை வணக்கம்.

வரவேற்புரை:

திரு. ஆர். கனகசபை, எம். பி., அவர்கள், சிதம்பரம், வரவேற்புக் குழுத் தலைவர்.

கொடியேற்றலும் உரையும்:

திரு. டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர்.

ஆண்டறிக்கை: சமாஜச் செயலாளர்.

மாநாட்டுத் திறப்புரை:

தமிழ் நாடு சட்ட சபைத் தலைவர் உயர்திரு. எஸ். செல்லபாண்டியன், பி. ஏ., பி. எல். அவர்கள்.

வைர விழா மலர் வெளியீடு;

திரு. கா. இராமநாதன், பி.ஏ.,பி.எல். அவர்கள், மலேயா.

வைர விழா நூல்கள் வெளியீடு:

1. "சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப் பல்ல" [திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இயற்றியது.]
2. திருவாசகம்: [காரைக்குடி திரு. எஸ். நாராயணன் செட்டியார் அவர்கள் பொருளுதவியுடன் திரு. மு. அருணாசலம், எம்.ஏ., அவர்கள் பதிப்பித்தது.]
3. முருக வழிபாடு: [திரு. கௌரி முத்துக்குமாரசாமி நாயனுர் அவர்கள் பொருளுதவியுடன் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் எழுதியது.]
4. கூட்டு வழிபாட்டுப் பாமாலை: [திரு. கொ. நீ. சிங்காரவேலு, எம்.ஏ., அவர்கள் பதிப்பித்தது.]

5. தத்துவப்பிரகாசம் - பழைய உரையுடன்: [திரு. மு. அருணசலம், எம். ஏ., அவர்கள் பதிப்பித்தது.]
6. திருவாசகக் குறிப்புகள்: [திரு. மு. அருணசலம், எம்.ஏ., அவர்கள் எழுதியது.]
7. திருஅருட் பயன்: [வித்துவான் திரு. க. வெள்ளை வாரணனர் அவர்கள் நிரம்பவழகிய தேசிகர் உரை யுடன் பதிப்பித்தது.]

வெளியிடுவோர்:

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள்.

திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ. அவர்கள்.

திரு. மு. அருணசலம், எம்.ஏ. அவர்கள்.

சமாஜ ஆங்கில இதழ் வெளியிடல்:

"சைவ சித்தாந்தம்"—திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள், ஆணையாளர், இந்து சமய அறக்கட்டளை ஆட்சித்துறை, சென்னை.

தலைமைப் பேருரை:

அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

மாலை 4 மணி முதல் 8 மணி வரை

சைவர் மாநாடு

இறை வணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள்:

திரு. பி. சுந்தரேசம் பிள்ளை அவர்கள், கும்பகோணம்.
—தேவாரப் பண்

திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் திருவதிகை.
—உறுதி

வித்துவான் திரு. பு. மா. ஜய செந்தில்நாத முதலியார் அவர்கள், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.
—நிறைபெருங் கருணை

புலவர் - திரு. அ. நடேச முதலியார் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக்கழகம்.
—அன்பும் அறிவும்

இரண்டாம் நாள்: மார்கழி 17 (1-1-66) சனிக்கிழமை

காலை 7 மணி: இளமையாக்கினார் கோயில் வழிபாடு.

காலை 9 மணி முதல் 12-30 மணி வரை

சைவ மங்கையர் மாநாடு

இறை வணக்கம்.

தொடக்க உரை:

டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம், B.Sc., M.D., M.R.C.P., (Lond.), சென்னை.

தலைமைப் பேருரை:

மதுரை ஆலை அதிபர் திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி. இராதா தியாகராசன் அவர்கள்.

சொற்பொழிவுகள்:

திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள், சென்னை.

—பெரிய புராணப் பெண்மணிகள்

திருமதி. சைவப்புலவர் - பண்டிதை - செல்வி - தங்கம்மா அப்பாகுட்டி அவர்கள், இலங்கை.

—மணிவாசகரின் ஞான உள்ளம்

திருமதி. வித்துவான்-சிவ. பார்வதி அம்மையார் அவர்கள் (பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் திருமகளார்)

—திருஞானசம்பந்தர்

[*பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சமாஜ உறுப்பினர் கூட்டம். அறிமுகம், தீர்மானங்கள் முதலியன.*]

மாலை 4 மணி முதல் 8 மணி வரை

சைவர் மாநாடு

இறை வணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள்:

திருமுறைச் செல்வர், சித்தாந்த தினகரன், வித்துவான் - மறை. திருநாவுக்கரசு அவர்கள், தூத்துக்குடி.

—பேரின்பம் பெற்ற பெருந்தகையார்

பேராசிரியர் - திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி. எல்., எம்.ஓ.எல்., அவர்கள்.

—12-ம் நூற்றாண்டிற்குத் தற்காலத்திற்குரிய விளக்கம்

திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்கள்,
ஆசிரியர், "திருக்கோயில்" —உமாபதி சிவம்

வித்துவான்-திரு. ஔவை. சு. துரைசாமிபிள்ளை அவர்கள்,
மதுரை. —தில்லையெல்லையில் திருஞானசம்பந்தர்

மூன்றும் நாள் மார்கழி 18 (2-1-66) ஞாயிற்றுக்கிழமை

காலை 7 மணி : கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் கோயில் வழிபாடு.

காலை 9 மணி முதல் 12-30 மணி வரை

சைவ இளைஞர் மாநாடும் சைவப் புலவர் மாநாடும்

இறை வணக்கம்.

தலைமைப் பேருரை :

திரு.பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை அவர்கள், எம்.ஏ., எல்.டி.,
வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

சொற்பொழிவுகள் :

திரு. க. வடிவேலாயுதம், எம்.ஏ., அவர்கள் தமிழ் விரிவுரையாளர், கிறித்துவக் கல்லூரி, தாம்பரம்.
—திருமுறைப் பெருமை

சைவப் புலவர் - வித்துவான் - வ. செல்லையா அவர்கள், (தலைவர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்) இலங்கை. —கந்த புராணக் கலாச்சாரம்

சித்தாந்தப் புலவர் வித்துவான்-திரு. கு. திருநாவுக்கரசு அவர்கள், சிதம்பரம். —சிறிய பெருந்தகையார்

புரவலர்-இ. வயித்தியலிங்கம் B.Sc. (Eng.), யாழ்ப்பாணம்.
—அவனன்றி ஓர் அணுவும் அசையாது

சைவப் புலவர்-பண்டித திரு. த. கிருஷ்ணபிள்ளையவர்கள், இலங்கை. —சேக்கிழார் தந்த செல்வம்

சைவப் புலவர் திரு.மு. திருஞானசம்பந்த பிள்ளை அவர்கள் (கௌரவச் செயலாளர், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்) இலங்கை.—வெளிநாடுகளில் சைவம்

[பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம், சமாஜ அலுவலர் தேர்தல், தீர்மானங்கள் முதலியன. உறுப்பினர் தவறாது வரவும்.]

பிற்பகல் 4 மணி முதல் 9 மணி வரை

சைவர் மாநாடு

இறை வணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

திரு. திருப்புகழ் மணி அவர்கள், சென்னை. —துஞ்சிப்பூ

வித்துவான் - திரு. மு. அருணசலம் பிள்ளை அவர்கள், தமிழ்த்துணைப் பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம். —ஏகனுகி இறைபணி நிற்றல்

சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், பி.ஏ., எல்.டி., காஞ்சிபுரம்.
—மூவரும், முதல்வன் கூத்தும்

தலைவர் முடிப்புரை.

செயலாளர், வரவேற்பாளர்களின் நன்றியுரை.

கடவுள் வாழ்த்து.

முக்கிய குறிப்புகள் :—1. சிவபூஜகர்கள் சிவபூசை செய்ய வசதி உண்டு. 2. சமாஜ விழா நாட்களில் சிவதீட்சை பெற விரும்புவோர்களுக்குத் தீட்சை செய்ய ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன. இது குறித்து விவரம் அறிய விரும்புவோர் திரு. மு. அருணசலம், எம்.ஏ., திருச்சிற்றம்பலம், பந்த நல்லூர் வழி, தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளவும். 3. சமாஜ உறுப்பினர்களுக்கு மட்டும் உணவும் உறையுளும் ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கிறது. இவை தேவைப்படுவோர் 22-12-65க்குள் கீழ்க்காணும் முகவரிக்குத் தெரிவிக்கவும்: திரு. பு. ர. சாமிநாதன், 23, கனகசபை நகர், சிதம்பரம். உணவுப் பங்கீடு காலமாதலின், உணவு ஏற்பாடு செய்பவர்களுக்கு எண்ணிக்கையைத் தெரிவிக்கவேண்டி யிருத்தலால் முன்னறிவிப்பு மிக இன்றியமையாதது. 4. சமாஜ வெளியீடுகள் மாநாட்டுப் பந்தலில் விற்பனைக்குக் கிடைக்கும். 5. சமாஜ ஆயுள் உறுப்பினர் ரூ. 50/- ஆண்டு உறுப்பினர் ரூ. 3/- ஆங்கில முத்திங்கள் இதழ் "சைவ சித்தாந்தம்" ஆண்டுச் சந்தா ரூ. 5/- ஆகிய கட்டணங்கள் மாநாட்டுப் பந்தலிலேயே செலுத்தலாம். 6. தீர்மானங்களை அனுப்புவோர் சமாஜச் செயலாளருக்குச் சமாஜ அலுவலக முகவரிக்கு 22-12-65-ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முருகன் அச்சகம், சென்னை-14

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 38	விசுவாவசு மார்கழி 1965 டிசம்பர்	இதழ் 12

இரு திருவாசகப் பதிப்புக்கள்

ஆசிரியர்,

1. நீ. கந்தசாமிப் பிள்ளை, அண்ணாமலை சர்வகலாசாலைப் பதிப்பு மூலம், 1964.

2. மகாவித்துவான், ச. தண்டபாணி தேசிகரவர்கள், திருவாவடுதுறை யாதீனப் பதிப்பு, குருவருள் விளக்கம் என்னும் புதிய உரை, 1964.

மாணிக்க வாசக சுவாமிகள் சொல்ல ஸ்ரீ நடராஜப் பெருமானே தமது அருமைத் திருக்கரத்தால் திருவாசகத்தை எழுதி, "அழகிய திருச் சிற்றம்பலமுடையான் கையெழுத்து" என்று அதில் கையொப்பமும் இட்டு வைத்து மறைந்தார். இதுவே திருவாசகம் நூல்வடிவில் உலகுக்குக் கிடைத்த வரலாறுஎன்பது பழமையான கதை. திருவாதவூரர் புராணம் கூறும் சரித்திரமும் இதுவே யாகும்.

ஆதியில் சிதம்பரத்திலிருந்து இப்போது புதுச்சேரியில் போயிருக்கும் அம்பலத்தாடி மடத்தார் இதுபற்றி ஒரு கதை சொல்வார்கள். திருவாசகச் சுவடியைத் தங்களிடமே அளிக்க வேண்டும் என்று தில்லையில் உள்ளோர் கேட்க, தில்லைவாழ் அந்தணர் அது தங்களுக்கே உரியதென்று சொல்லி, யாரிடமும் தர மறுத்தனர். ஓர் அசரீரி வாக்கு, 'சுவடியைச் சிவகங்கையில் விட்டால், யார் கரத்

தில் வருகிறதோ, அவருக்கே அது உரியது,' என்று சொல்லிற்று. அங்ஙனமே செய்ய, நடராஜப் பெருமானே ஒரு சங்கமராய்த் தோன்றினர். சுவடி அவர் கரத்தில் வந்தது. அதுமுதல் அச்சங்கமர் மரபாரே ஆதித் திருவாசகச் சுவடியை வைத்துப் பூசிக்கும் பேறு பெற்றனர் என்று கூறுகிறார்கள். அம்பலத்தே ஆடுபவர் சங்கமராய் வந்து மடம் ஏற்படுத்தியமையால் அம்மடம் 'அம்பலத்தாடி மடம்' என்று பெயர் பெற்றது என்றும் சொல்வார்கள். தாங்களே அவர் மரபினர் என்றும், ஆதித் திருவாசகச் சுவடி இன்னும் தங்களிடம் இருக்கிறதென்றும், அதை யாரும் பிரித்துப் பார்ப்பதில்லையென்றும், அம்மடத்தார் கூறுவார்கள். இந்தக் கதையை உண்மை என்று கொண்டாலுங்கூட, தொடாமல் ஆயிரம் வருஷத்துக்கு மேலான பின், ஒரு சுவடி எந்த நிலையில் இருக்கும் என்பதைச் சுவடிப் பயிற்சியுடையோரே நன்கு அறிவர்.

எப்படியோ திருவாசகச் சுவடிகள் பல்கின. ஆதி ஏட்டைப் பார்த்துச் சிலர் எழுதிக்கொள்ள, எழுதிய ஒவ்வொன்றும் ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பெருகிற்று. சோழநாட்டில் சென்ற தலைமுறையில், திருவாசகச் சுவடியைப் பூசையில் வைத்திராத சைவர் வீடே இல்லை. எல்லோருமே பிரித்துப் படித்தார்களா என்பது வேறு விஷயம். எனினும், மார்கழி மாதத்தில் மட்டும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரு பதிகங்களையும் அதிகாலையில் எழுந்து நீராடிப் படிப்பதென்பது சைவர் வீடுகளில் பெருவழக்காய் இருந்து வந்தது.

இவ்வாறு பெருகிய ஏடுகளைத் தொகுத்து, ஆராய்ந்து, முதன் முதலாகத் திருவாசகத்தை அச்சிடும் வேலை சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. தஞ்சையில் இருந்த கலா ரசிகனான சரபோஜி மன்னன் தன்னிடம் தமிழ்ப் புலவராயிருந்த கொட்டையூர்—சிவக்கொழுந்து தேசிகரிடம் இவ்வச்சு வேலையை ஒப்புவித்தான். அவரே முதல் திருவாசகப் பதிப்பை 1837-இல் வெளியிட்டதாகச் சொல்லுவர். அவ்வச்சுப் பிரதி கிடைக்கவில்லை. அதை யாரும் பார்த்ததும் இல்லை.

அதற்கிணங்க அச்சிட்ட பல பதிப்புக்கள் கிடைக்கின்றன. ஆனால் இவை யாவும் மூல ஏட்டைத் தேடிப் பார்க்காமல் தேசிகருடைய பாடத்தை அப்படியே அச்சிட்டுக் கொண்ட பதிப்புக்கள்.

முதன் முதலாகத் தேசிகர் பதிப்புக்குப் பிறகு, ஏடுகளைப் பார்த்து, மூலத்தைச் செப்பம் செய்து, வெளியிட்ட பதிப்பு, மர்ரே கம்பெனியார் வெளியிட்ட 1956-ஆம் வருஷப் பதிப்பு.

காலஞ்சென்ற பேராசியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் சொற்களை முழுமையும் சந்தி பிரித்து, புது முறையில் மர்ரே கம்பனிப் பதிப்பாக நாலாயிரப் பிரபந்தத்துள் முதலாயிரத்தை முதன் முதலாக வெளிட்டார். இது தமிழ் நூல் அச்சின் சரித்திரத்தில் ஒரு பெரிய புரட்சி. சீர் வரையறைகளைக் கைவிட்டு, சொற்களை இப்படிப் பிரிக்கலாமா என்பது அன்று கற்றோர்க்கிடையே மிகவும் விவாதத்துக்கு இடமான விஷயமாய் இருந்தது.

அப்பதிப்பு முறையின் ஒரே நோக்கம் படிப்பில் குறைந்தவர்களும் மூலத்தைப் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் எனபதே. பிள்ளையவர்கள் காலமானபின், கம்பனியார் பல புலவர்களின் உதவியால் சுமார் நாற்பது நூல்கள் அதே முறையில் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வரிசையில் அவர்கள் வெளியிட்ட ஐந்தாவது நூல் திருவாசகம். இப்பதிப்பில் பலவான புதிய பாடங்களை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். யாவும் திருத்தமான பாடங்கள். அந்த வகையில் இதுவே சிவக்கொழுந்து தேசிகருடைய பதிப்புக்குப் பிறகு, முதன் முதலாக வந்த பதிப்பு. மற்றவை யாவும் மறு அச்சுக்களே; பதிப்புக்கள் அல்ல.

மர்ரே கம்பனியாரின் திருவாசக வெளியீட்டுக்குப் பேருதவியாய் இருந்தவர் தஞ்சை பள்ளியக்கிரகாரம் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் என்று அப்பதிப்பு கூறுகிறது. எல்லா வகையாலும் அதில் அவர்களுடைய உதவி சேர்ந்தது. மீண்டும் அவர்கள் அண்ணாமலை சர்வ

கலாசாலை வெளியீடாக 1964 முடிவில் ஒரு புதிய பதிப்பு வெளியிட்டார்கள். இது ராயல் அளவில் 130+500 பக்கங்கள் கொண்டது. திருவண்ணாமலை, திருவுத்தரகோச மங்கை, சிதம்பரம் ஆகிய படங்களும், உடையது. இப் பதிப்பின் தனிச் சிறப்புக்கள் பல.

ஒன்று, இதில் பழைய மூலம் ஏட்டில் காணப்பட்ட படியே சந்தி பிரிக்காது, பெரிய எழுத்தில், இடப்பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, வலப்பக்கம் மர்ரே கம்பனிப் பதிப்புப் போல சொற்கள் முழுமையும் சந்தி பிரித்து, அதே பாடல் எதிரே அச்சிடப்பட்டுள்ளது. நிறுத்தல் குறியீடுகளும் பெய்யப் பெற்றுள்ளன. யாரும் எடுத்து எளிதில் படிக்கவும், பொருள் உணர்ந்து கொள்ளவும் இது வசதியாயுள்ளது. சொல் முடிபுகளும், பொருள் முடிபும் உணர நிறுத்தல் குறியீடுகள் துணை செய்யும்.

மூன்றாவதாக, அச்சு நெருக்க மில்லாமல், மிகவும் விசாலமாய்க் கண்ணுக்குச் சோர்வு அளிக்காததாய் உள்ளது. நான்காவது மிகவும் சிறப்பான அம்சம், வலப்பக்கம் பாடலையடுத்து ஓரத்தில் கடின சொற்களுக்கு அந்தந்த வரிக்கு நேரேயே எளிதான பொருள் தரப்பட்டுள்ளது. பொருள் உணர்வதற்காக அடிக்குறிப்பையோ, பின்பக்கங்களைப் புரட்டியோ பார்க்க வேண்டிய சிரமம் சிறிதும் இல்லாமல், படிக்கும்போதே, அதே கண்ணோட்டத்தில் பொருள் உணர்ந்து படிக்க இது பேருதவியாகும். இவ்வாறு தமிழ் நூலெதுவும் இதுவரை அச்சானதில்லை. ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் வெளியாகிய ஆர்டன் பதிப்பொன்றில் மட்டும் இம்மாதிரி அமைப்பைக் காண முடியும்.

ஐந்தாவதாக, நூலுக்குரிய அங்கங்கள் சிறப்பான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன. அடிகள் வரலாறும், திருவாசக அமைப்பும் அழகும் என்ற பகுதியும், படித்து இன்புறத் தக்கன. கருத்து வேறுபாடுகள் இருத்தல்

இயல்பே. பிள்ளையவர்கள் பல்லோரும் சென்ற சுவட்டில் செல்லாமல், பல புதிய கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். சிலர் ஏற்கலாம், பலர் மறுக்கலாம். ஆறுவதாக, பல புராணங்களில் காணும், திருவாசகப் பதிக ஒப்பு அட்டவணைக் கதைக் குறிப்புக்கள், பதிகம் செய்யுள் தொகை காட்டும் பாடல்கள், திருவாசக உண்மை, சிதம்பர சுவாமிகள் உரைக் குறிப்பு முதலியன, புகழ் மாலைகள் போன்ற பகுதிகள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பெரு விருந்தாயுள்ளன.

ஏழாவதாக, திருத்தமான பாடங்கள் : முப்பதுக்கு மேற்பட்ட இடங்களில் திருத்தமான ஏட்டுப் பாடங்கள் இங்கு மேற்கொள்ளப் பட்டன. இவை, இவர்களும் உடன் இருந்து வெளியிட்ட மர்ரே கம்பனிப் பதிப்பிலும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருத்தமான பாடம் என்று சொன்ன மாத்திரத்தில் 'ஏன் பாடத்தைத் திருத்த வேண்டும்'; என்று சிலர் கேட்கிறார்கள். முதன் முதலாகப் பதிப்பித்தவர் ஓர் ஏட்டை அல்லது சில ஏடுகளைப் பார்த்தே பிரதிசெய்து அச்சிட்டார். ஏட்டில் சில பிழைகள் இருந்திருக்கக் கூடும்; பார்த்து எழுதியதில் பிழையிருக்கக் கூடும் ; காலம், சென்ற நூற்றாண்டின் முற்பகுதி என்பதை மறக்கக் கூடாது. அதன்பின் யாரும் ஏட்டைப் பார்த்து அதற்கு இயையத் திருவாசகப் பாடத்தைக் கொண்டதில்லை. நூறு வருஷத்துக்கு மேலாகி (1837–1956) மர்ரே கம்பனி கந்தசாமிப் பிள்ளையவர்களின் பதிப்புக்களில் மட்டுமே ஏடுகள் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன. பரிசோதிப்பவர்களின் தகுதிக்கும், கவனத்துக்கும் ஏற்ப, திருத்தமான சில பாடங்கள் கிடைக்கின்றன. அச்சில் உள்ளதே வேதம் என்பதில்லை. முன்னோர் எழுதி வைத்ததே இந்த நிலைமைக்கு ஆதாரமல்லவா? ஆதலால், பழமையான ஏடுகளின் ஆதாரம் எந்த நிலையினும் நமக்கு உதவியாய் இருக்கும் என்பது உறுதி. பொருளின் தெளிவுக்கும், சிறப்புக்கும் ஏடுகள் எந்த நிலையிலும் உதவி செய்யும்.

ஓரிரு எடுத்துக் காட்டுக்களால் ஏட்டிலும் பாடம் திருந்தியவாற்றை நன்கு விளக்கிக் கூறுவோம்: 'அச்சப் பத்து' எட்டாம் பாடல் "தறிசெறி களிறும் அஞ்சேன்" என்று தொடங்குகிறது. எந்தப் பயங்கரமான பிராணிக் கும் அஞ்சமாட்டேன். இறைவன் கழல்களை ஏத்தும் அறிவு இல்லாதவரைக் கண்டால் மட்டும் அஞ்சுவேன்" என்று மாணிக்கவாசகர் பாடுகிருர். 'தறிசெறி களிறு' என்ருல், கட்டுத் தறியில் செறிக்கப் பட்டுள்ள—கட்டப் பட்டுள்ள யானை; கட்டப்பட்டுள்ள யானையைக் கண்டு, யாரே அஞ்சுவார்? குழந்தைகூட அஞ்சாது, அருகில் சென்று, வேடிக்கை பார்ப்பது இயல்பு. யானையை எப் போதும் கட்டியே வைத்திருப்பார்கள். ஆதலால் கட்டிய யானைக்கு அஞ்சமாட்டேன் என்பதில் பொருள் சிறக்க வில்லை. ஏடுகளில் பாடம் "தறிசெறு" என்று உள்ளது. "கட்டுத் தறியை முறித்துக் கொண்டு ஓடுகின்ற" என்பது இதன் பொருள். எனவே, இப்படிப்பட்ட யானைக்குக் கூட அதாவது மதம் பிடித்த யானைக்குக்கூட நான் அஞ் சேன் என்று அவர் கூறுகிருர் என்ருல், பொருள் சிறப் பாக இருக்கிறது. 'செறி' என்பது "செறு" என்றே ஏடு களில் காணப்படுகிறது. ஏட்டில் காணும் பேதம் ஓர் எழுத்துத்தான். இவ்வாறு ஏட்டையொட்டி அமைப்ப தில் இவ்வளவு பொருள் பொலிவு ஏற்படுகிறது. ஏட்டுப் பாடமே உண்மைப் பாடம் என்று இங்குக் கருதுவதே முறையாகும்.

திருவெம்பாவை 18 ஆம் பாடல் இதுவரை "பிறங்கு ஒளிசேர் விண்ணுகி" என்றே அச்சிடப்பட்டு வந்தது. பிரகாசிக்கின்ற ஒளிபொருந்திய ஆகாயம் என்பதே இதன் பொருள். ஆனுல் ஏட்டுப் பாடம் "பிறங்கு ஒலிசேர் விண்ணுகி" என்பதாகும். ஒலி சேர் விண் என்பது தத்துவங்களின் ஒடுக்க முறையைக் கூறுமிடத்து ஒலியா கிய தத்துவம் ஆகாயமாகிய பூதத்தில் ஒடுங்கும் என்பதை இது குறிக்கிறது. முந்தியதினும் பார்க்க இதுவே சிறப் பான பொருள் தருகின்றமையால், இதுவே உண்மைப் பாடம் என்று கருத வேண்டும். இத்தகைய உதாரணங் கள் மிகப் பல.

இப்படியாகப் பலவகைச் சிறப்புக்களும் பொருந்திய ஒரு சிறப்பான பதிப்பு இப்பதிப்பாகும். திருவாசகத்துக்குரிய விஷய கௌரவத்துக்கு ஏற்ப இப்புத்தகம் கண்ணியமுடைய பதிப்பாகவும் இருக்கிறது. அடக்கவிலையில் கால் பங்குக்கு (இரண்டு ரூபா) திருப்பனந்தாள் காசி மடத்தின் தொகையுதவியில் இப்புத்தகத்தை விற்பனை செய்கிறார்கள். சைவர் அனைவரும் வைத்துப் படித்துப் போற்றிப் பயனடைய வேண்டிய செம்மையான நூல். நீண்ட பிழைதிருத்தம் சேர்க்க வேண்டி வந்ததே இதிலுள்ள குறை.

மற்றது திருவாவடுதுறை யாதீனத்தார் வெளியிட்ட திருவாசகவுரைப் பதிப்பு. இது மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகரவர்கள் "குருவருள் விளக்கம்" என்ற பெயரில் எழுதிய உரை. பெரிய புத்தகம், டிம்மி அளவில் பக்கங்கள் 32+1424; மிகவும் நல்ல காகிதம்; நல்ல அச்சு; பல படங்கள் உடையது. (இப்படங்கள் வேண்டுமா என்பது வேறு கேள்வி;) இதைப் பத்துரூபா விலையில் மடத்தார் கொடுக்கிறார்கள். பணம் திருப்பெருந்துறை ஆலயத் திருப்பணிக்கு உரியது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புத்தகத்தின் பருமனையும் நேர்த்தியான அச்சு முதலியவற்றையும் பார்க்கும்போது, விலை மிக மிகக் குறைவென்றே சொல்லத் தோன்றும். தனிப்பட்டவர்கள் யாரும் இப்படி அச்சிட்டுத்தர முடியாது. இவ்வெளியீட்டுக்காக மடத்தாரை மிகவும் பாராட்ட வேண்டும்.

இப்பதிப்பைப் பற்றிச் சில சொற்கள் கூறுவது மிகையாகாது. திருத்தமான பாடங்கள் இடம் பெறவில்லை. உரையாசிரியர் இதற்குக் கூறும் காரணம் மரபை மாற்றக் கூடாது என்பதே. திருவாசக மரபென்பது தோன்றிய காலம் தொடங்கிச் சென்ற நூற்றாண்டின் முற்பாதி வரையில் ஏட்டு வடிவில் இருந்து வந்தது. பாடமோ, மரபோ என்பது ஒருவருக்கும் தெரியாது. சிறந்த புலவராகிய சிவக்கொழுந்து தேசிகருள்ளிட்டார் புதிதாய் அச்சுப் புத்தக மரபை உண்டாக்கினார்கள்.

இவ்விரண்டில் எது மரபு? ஒன்றேகால் நூற்றூண்டாக வழங்குவதா? ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாக ஏட்டில் கற்றோரிடை வழங்குவதா? பாடத்தை நாமாகத் திருத்தக் கூடாதேயன்றி, பழமையாக வந்த திருத்தமான பாடத்தைச் சொல்லுவது உண்மை மரபாகும். ஏட்டில் கண்ட உண்மையைக் கொள்ளாமைதான் மரபுவழு என்று கருதத் தகும்.

மேலும், இப்பதிப்பில் பதிகந்தோறும் மரபையொட்டித் தலைப்பில் சொல்லப்பட்ட தலக்குறிப்பு நீக்கப் பெற்றிருக்கிறது.

கோகழி–திருவாவடுதுறை என்றே உரையாசிரியர் எழுதுகிறார். ஆதின அபிமானம் என்பது வெளிப்படை.

இவ்வுரையுள் பிழைபட்ட இடங்கள் பல: இவ்வளவு அழகான அச்சுடைய பெரிய புத்தகத்தில் பிழை காண்பது குற்றம் காணும் நோக்கமன்று. கருத்துப் பிழையாய் இருக்கிறதே என்று ஏற்பட்ட வருத்தத்தால், சொல்கிறோம் என்று சைவ அன்பர்கள் கருதுவார்களாக.

திருத்தோணோக்கத்தின் கடைசிப் பாடல் பின்வருமாறு: (326)

உரை மாண்ட உள்ளொளி உத்தமன்வந்து உளம்புகலும்
கரை மாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரை மாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரை மாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ.

இங்கு இறைவன் வந்து, உளம் புகலும், உலகப் பற்றுக்கள் நீங்க, புலன் நுகர்ச்சிகள் அற்றுப்போய், இந்திரியங்கள் தம்வழி உயிரை இழுத்துச் செல்லும் நிலை நீங்கிற்று என்பதை மாணிக்கவாசகர் சொல்லுகிறார். சிவஞான சித்தியாரில் (122)

—அரும் பாவங்கள்

தரையுளோர் செய்யில் தீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்

என்னுமிடத்தில் 'துரை' என்பதற்குச் சிவஞான சுவாமிகள் உரை கூறுகிறார். மோனை எழுத்துக் கேற்பத் தண்டமாகிய துரையைச் செய்தெனினும் அமையும். துரை–மிகுதிப்பாடு; அது என்னுடைய 'துரை–மாண்ட வா பாடி' என்பதனானும் அறிக'' என்று இத் திருவாசகத் தொடரையே எடுத்துக் காட்டுகிறார். இங்கு, மிகுதிப்பாடு என்பது "முனைப்பு" அல்லது "வேகம்". தண்டத் துரை-மிகுதியான தண்டனை. திருவாசகத்தின் பொருளாவது, எனது மிகுதிப்பாடு–முனைப்பு–வேகம். அழிந்த தன்மையைப் பாடி. என்பது. 'துரை' என்ற சொல்லுக்கு 'வேகம்' என்ற பொருளும் உண்டு. 'பிறவித் துரை துடைத்து' என்ற சடகோபரந்தாதி 47-ஆம் பாடலில் காண்க. வேகம் கெடவேண்டும் என்பதை மாணிக்க வாசகர் 'வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க' என்ற சிவபுராணத் தொடக்கத்திலேயே (அடி 6) கூறக் காண்கிறோம்.

'துறை என்பது எதுகை நோக்கித் 'துரை' எனவாயிற்று. துறை–இடம். துரைமாண்ட வாபாடி-இடஞ் சிறந்த வாற்றினைப் பாடி, புகவேண்டிய மனத்தில் புகத்தக்க புனிதன் புகுந்து இடங் கொள்ளுதலும், புகத்தகாத பேராசையும், இந்திரியங்களும் அகன்றன; அதனால், மனமாகிய இடம் மாட்சிமையுற்றது. அதனைப் பாடித் தோணோக்கமாடுவோம் என்றதாகக் கொள்க'.

இது தேசிகர் உரை. துரை என்ற சொல்லுக்குப் பொருள் விளங்காமையால் போலும், துறை என்ற சொல்லின் விகாரம் எனக் கொண்டார். துரை–இடம் என்று சொன்னமையினாலே 'மாண்ட' என்றால் மாட்சிமையுற்ற–சிறந்த என்று பொருள் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது; மனமாகிய இடம் மாட்சிமைப் பட்டது என்று சொல்ல நேர்ந்தது. சுவாமிகள் உரைக்கும் இதற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. சிவஞான சுவாமி

களே எங்களுடைய குலதெய்வம் என்று கொண்டாடுகின்ற திருவாவடுதுறை ஆதீனத்தார் வெளியீடு ஏன் இவ்வாறு சுவாமிகளுடைய கருத்தைக் கைவிட்டது, என்பது விளங்கவில்லை.

இவ்வாறு தவறான உரை எழுதப்பட்ட இடங்கள் பல. சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் காட்டுவோம்.

திருச்சதகம் 9-ஆம் பாட்டின் இறுதி வரியில் "புவனெம்பிரான்" என்ற தொடருக்கு மிகவும் வலிந்து வேண்டாத உரைகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. புவன்-எம்பிரான் என்று இத்தொடரைப் பிரித்து இறைவனை எம்பிரான்—சுயம்பு மூர்த்தியானவன் என்று நேரே பொருள் செய்ய வேண்டும். "ஓம்பூர் புவஸ்ஸுவர் ஓம்" என்ற காயத்திரி மந்திரத்தில் வரும் 'புவ' என்ற சப்தமே இங்கு புவன் என்று வந்தது; புவன்—சுயம்புவானபெருமான். 'புவனம் என்பது புவனெம் என விகாரப் பட்டது. புவன் எம்பிரான் எனப் பிரித்து, அம் விகுதி கெட்ட புவனம் எனக்கொண்டு, உலகம் என்னும் பொருள்படும் என்பாரும் உளர், என்ற உரைப்பகுதி காண்க; புவனம் ஏன் புவனெம் என விகாரப்பட வேண்டும்? புவன் என்பதை ஏன் அப்படியே சொல்லாகக் கொள்ளாமல் அம் விகுதி கெட்ட புவனம் ஆகக் கொள்ள வேண்டும்? புவன்—எம்பிரான் என்று ஏன் பிரிக்கலாகாது? இலக்கணம் படித்தாலே எதையும் திரிக்கவும், விகாரப் படுத்தவும் எண்ணம் ஓடும் போலும். மாணிக்க வாசகரே பாடி இருந்தால்தான் என்ன?

இனி மற்றோர் உதாரணம் திருப்பள்ளியெழுச்சி ஐந்தாம் பாடல்:

பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரை

இதன் பொருளாவது, "நீ பூதங்கள் அனைத்திலும் எப்போதுமே நீக்கமற நிறைந்திருக்கிறாய் என்பதல்லாமல், நீ ஒன்றை விட்டுப் போகின்ற நிலைமையும் இல்லை. ஒன்றில் புதிதாக வரவேண்டிய நிலைமையும் இல்லை நீ எப்போதும் எங்கும் இருப்பவனாதலால், என்றே உன்னை ஞானிகள் இசை கொண்டு பாடி யாடுவார்கள் அல்லாமல் உன்னைத் தரிசித்துணர்ந்தவர்களைக் காதாலும் நாங்கள் கேட்டதில்லை" என்பதாகும் போக்கிலன் வரவிலன் என்பதற்கு 'நீ ஒன்றை விட்டுப் புடை பெயர்ந்து மற்றொன்றுக்குப் போக வேண்டிய தன்மையும் இல்லாதவன் முன் இல்லாதிருந்து, புதிதாகப் பின் வர வேண்டிய தன்மையும் இல்லாதவன்' என்பதே பொருள் 'போக்கும், வரவும், புணர்ப்பு மிலாப் புண்ணியனே' என்ற சிவபுராண (77) அடியையும் ஒப்பு நோக்குக. இதன் பொருள் 'போதலும் வருதலும், சேர்த்தலும் உனக்கு இல்லை. எப்போதும் நீ எங்கும் சேர்ந்தே நிற்பவனாதலால்' என்றவாறு. தோற்றக் கேடுகள் இல்லாதவன் என்றும், இறப்பும் பிறப்பும் இருப்புமாகிய புடைபெயர்ச்சி இல்லாமல். என்றும் நிலைத்தவன் என்றும் உரைகாரர் கூறி இருப்பது சிறப்பாகத் தோன்றவில்லை. பிறப் பிறப்பு இல்லாதவன் என்று ஆண்டவனுக்குக் கூறுவது அவனுக்குப் பெருமை யாகாது.

இனி 536 ஆம் பாடல். பிடித்த பத்து 3 ; அம்மையே அப்பா என்ற பாசுரம் :

பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே.

என்ற இடத்து, புழுத்தலைப் புலையனேன் என்ற தொடருக்குப் "புழுத்து அலைகின்ற நாயினை ஒத்த இழி தகைமை யுடையேனாகிய எனக்கு" என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இங்கு நாய் எங்கிருந்து வந்தது? புழுத்தலைப் புலையன் என்று உள்ளமையால், இத்தொட

ரைப் புழுதலை புலையன் என்று மூன்று பெயர்ச் சொற்க ளாகவே பிரித்து, புழுப் பொதிந்த தலையுடைய அற்பன் என்று பொருள் செய்ய வேண்டுமேயன்றி, பகர ஒற்று உள்ளமையால், புழுத்து அலை புலையன் என்று பிரித்து, அலை என்பதை வினைத்தொகையாக்கிப் புழுத்து அலை கின்ற புலையன் என்று பொருள் செய்ய இடமில்லை. இது இலக்கண.விரோதம். இதுமட்டுமல்ல. நாயின் செய்தி உரையாசிரியர் தாமாக வருவித்து விளக்கம் எழுதியிருப் பது மிக்க பிழையாகும்.'' நாய் காரியமின்றி அலையும் குணம் உடையது. அதிலும் அது புழுக்கண்ட–நாயின்–அதனைப் போக்கிக் கொள்ளும் அறிவின்மையால், தன் உடற்புண்ணில் புழு நெளியும் போதெல்லாம் அந்நோய் பொறுக்கமாட்டாது அலைந்துகொண்டே இருக்கும். அது போல வினையின்றி அலைகின்றேன் என்பார், புழுத்து அலைப்புலையனேன் எனத் தன்னைக் குறித்தார்.'' இவ் வளவும் பொருந்தாத சொல்,

அற்புதப் பத்து ஒன்பதாம் பாடலில் (575) ''புழுத் தலை நாய்போல்,'' என்று அடிகள் கூறுகிறார். இங்கு இத்தொடரைப் புழு–தலை–நாய் என்றும், புழுத்து அலை நாய் என்றும், இரு வகையாகவும் பிரிக்கலாம். உரை யாசிரியர் முன் கூறியுள்ள விளக்கம் ஒரு வேளை இவ் விடத்தில் பொருந்தக்கூடும்.

திருவேசறவு கடைசிப் பாடலில் (553) 'ஊனுரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே'' என்ற தொடருக்கு, ''என்னுயிர் இவ்வுடலில் வாழும் வாழ்க்கை வீணன அடயோகங்களால் ஒறுத்து வெறுப்பதற்கான தன்று; பெரும்பயனை எளிமையில் கிடைக்கச் செய்யும் சாதனமாயிற்று'' என்று கூறுகிறார். ஊன் ஆகுபெய ராக உடலை உணர்த்திற்று; உயிர் உடலோடு கூடி வாழும் இவ்வாழ்க்கைக் காட்டில் உறைந்தும் காயிலை தின்றும் கதிதேடி அலைவதற்காக அன்று, தைலதாரை போல இடைவிடாது அன்பு செய்தால் எளிமையான முறையில் சிவஞானம் பெற்றுச் சிவபோகத்தில் அழுந்து வதற்கே எனப் பிறவிப்பயனைப் பேசுவார் ''ஊனுரும் உயிர்

வாழ்க்கை ஒறுத்து வெறுத்திட அன்று" என்றருளினர். இதனுல், உடல் நோகாமலே உய்தியடையும் உபாயம் உணர்த்தப்பட்டமை காண்க.''

இங்கு பொருள் இதற்கு மாருக இருக்கும் என்று தோன்றுகிறது. உடல் நோகாமலே உயிரை அடையும் உபாயத்தை மாணிக்கவாசகர் எங்கும் உணர்த்தவில்லை. உடலை இழித்து வெறுத்தே பேசுகிருர். இங்கு பொருளாவது, "உயிர் வாழ்க்கையை அக்கணமே வெறுக்கும் படியாகப் பெருமான் அடியேற்கு அருள் செய்தான்" என்பதே. அன்று என்ற சொல் எதிர்மறைப் பொருளதன்று; அக்கணமே என்று பொருள் தருவது.

அடுத்த பாடலில் (554) 'அயனெடு மாலறியாத நெறியானே', என்ற இடத்தில் பொதுவாக அடிமுடி தேடிய வரலாறு குறிக்கப்பட்டது. "மாலும், அயனும் அறியார் என்றது, தந்தை யறிவு, மகன் அறிவு என்ற முறைமையை விளக்கியது, தந்தையாகிய திருமால் அறியாதது போல மகனுகிய பிரமனும் அறியானுயினன் என்பதாம்" என்று எழுதியுள்ள விளக்கம் சிறிதும் பொருத்தமில்லாத தாகும்.

சென்னிப்பத்து 3ஆம் பாடல் (579):

நங்கைமீர், எனைநோக்குமின்; நங்கள்
நாதனம் பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கைமார் கையில் வளையும்கொண்டுஎம்
உயிரும் கொண்டு எம்பணி கொள்வான்

பெண்களே! என்னைப் பாருங்கள். நமக்குத் தலைவனுய் உள்ளவன் நம்முடைய அடிமைத் திறத்தை பெற்றுக்கொண்டவன். தெங்கஞ்சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள வீரன் நம் தலைவன்,

பெண்களாகிய நம் உள்ளத்தைக் கவர்ந்தமையால், நம் கைவளைகளைப் பறித்து நம் உயிரையும் அடிமைகொண்டு, நம்முடைய பணியையும் கொள்பவன்'' என்பது பொருள். ஆனால், உரைகாரர் பொருள் காண இடர்ப்படுகிறார். 'நாதனம் பணி கொண்டவன்' என்ற தொடரை நாதன்—நம் பணி கொண்டவன் என்று பிரிக்காமல் நாதன்-அம்பு-அணி கொண்டவன் என்று பிரித்து, படைக்கலங்களை அணியாகக் கொண்டவன் என்று எழுதுகிறார். அம்பு—படைக்கலம். இதை விளக்கி வேறோர் இடத்தில் தெளிவாக எழுதி இருக்கிறார்.

அதாவது சிவபெருமான் வில்லையும், அம்பையும் ஏந்தித் திரிபுர சம்மாரம் செய்யச் சென்றபோது, நகைத்தே எரித்தமையால், அப்படைக்கலங்கள் அவன் கையில் தொழிற்படாமல், அணியாக (அழகுக்காக) நின்றன. ஆதலால், அம்பு அணி கொண்டவன் என்று பொருள் செய்கிறார். இது சிறிதும் பொருத்தமில்லாத கூற்று. நாதன் முன்னமே நம் பணி கொண்டவன், எம் உயிரும் கொண்டு இனியும் எம் பணி கொள்பவன் என்று கூறுவதில், எந்த முரணும் இல்லை. பணி கொள்வது அடிமைத் திறம் நோக்கி, உயிர்கொள்வது காதல் துறையில். காதல் வசப்பட்ட ஒரு பெண்ணின் நிலையில் வாதவூரடிகள் தம்மை வைத்துப் பாடுவதால், காதல் திறமும் அடிமைத் திறமும் பின்னியே வருகின்றன. பாசுரங்களில் வரும் அகத்துறைப் பாடல்களின் இயல்பே இது. ஆகவே, இங்கு வலிந்து, சுற்றிப் பொருள் செய்ய வேண்டிய அவசியமில்லை.

உரையாசிரியர் இதனோடு நிற்கவில்லை; அம்பு என்ற கருத்தைத் தொடர்ந்து மேலும் விளக்கம் வருகிறது :

''அந்த நங்கைமார்கள், ஐயோ அவன் கையில் சூலம், வாள், எரி முதலிய கொலைக்கருவிகள் இருக்கின்றனவே! ஆதலால், யாங்கள் அவனை அணுகவும், அஞ்சுகிறோம் என்றதாக எண்ணி, அவையாவும் கொலைக்கருவிகளாயினும் கொல்வன அல்ல; அழகுக்காக அணியப் பெற்ற

னவே. இக்கருவிகளைக் கொண்டு கொன்றதாக அவன் வரலாற்றில் எங்காவது கண்டும் கேட்டும் இருக்கின்றீர்களா? அஞ்சாதே வாருங்கள் என்கிறார்.

மூலத்தில் இதற்கான கருத்து எதுவுமில்லை என்பது வெளிப்படை.

இவ்வாறு உரை முழுமையும் சிக்கலும், சுழற்சியுமாகவே உள்ளது. மாணிக்கவாசகரையும், அவர் பக்தியையும் முன்னே நிறுத்தும் நோக்கம் போய், புலமையை முன்னே நிறுத்தும் நோக்கமே கைகூடி இருக்கிறது. இதை நன்குணர்ந்தே அப்பெருமான் "கற்றாரை யான் வேண்டேன். கற்பனவும் இனி அமையும்" என்று முன்னமேயே தம் பாடலுள் பாடி வைத்தார்" போலும்.

இவ்வளவு குறைகள் இருப்பினும், பெரிய புத்தகம். அழகான அச்சு; மிகவும் பயனுள்ள 136 பக்கம் கொண்ட சொல்லகராதி முடிவில் உள்ளது என்பதைக் கருதி, பத்து ரூபா பணம் கொடுத்து வாங்கத்தக்க புத்தகம்.

எந்த விதத்திலோ இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் திருவாசகத்தினிடம் பலபேர் இவ்வாறு மனம் செலுத்துவதை நாம் நிச்சயம் வரவேற்போம். இம்மாத முடிவில் வரும் சமாஜ அறுபதாண்டு நிறைவு விழாவிலும் சமாஜத் திருவாசக மூலப் பதிப்பொன்று வெளிவருகிறது.

மார்கழி மாத விசேட தினங்கள்

3 (18—12—'65)	மானக்கஞ்சாற நாயனார் விழா
8 (23—12—'65)	சாக்கிய நாயனார் விழா
16 (31—12—'65)	வாயிலார் நாயனார் விழா
22 (6—1—'66)	சடைய நாயனார் விழா
23 (7—1—'66)	திருவாதிரை விழா
28 (12—1—'66)	இயற்பகை நாயனார் விழா.

உபநிடதங்களில் உருத்திராக்கம்

P. திருஞானசம்பந்தம் பிள்ளை, M. A., L. T.

விபூதியும் உருத்திராக்கமும் சிவசின்னங்கள் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. சிவஞானம் பெறுதற்குரிய சாதனம் உருத்திராக்கம் என்று உபநிடதம் கூறுகின்றது. அக்ஷமாலிகோபநிஷத் அக்கமாலையின் பல வகைகளைக் கூறுகின்றது. பவழம், முத்து, படிகம், சங்கு, வெள்ளி, பொன், சந்தனம், தாமரை, உருத்திராக்கம் ஆகிய ஒவ்வொன்றைக் கொண்டும் அக்கமாலை ஆக்கப்படலாம். இவ்வக்கமாலையில் ஐம்பத்தோரக்கரங்களையும் ஆவாகனம் செய்து ஞானமயமான இந்த அக்கமாலையில் தேவதைகள், பித்ருக்கள், பிரம்ம விஷ்ணுருத்ராதியர், தத்துவபேதங்கள், மகாமந்திரங்கள், கலைகள் ஆகியவை இருப்பதாகப் பாவனை செய்து உபாசிக்க வேண்டும் என்று அக்ஷமாலிகோபநிடதம் கூறுகின்றது. அக்கமாலிகையைக் கொண்டு ஜபிக்கப்பட்ட மந்திரம் உடனே சித்தியைத் தர வல்லது.

புசுண்டர் என்ற யோகி காலாக்கினிருத்திரரை அடைந்து விபூதி உருத்திராக்கங்களின் பெருமையை விளக்க வேண்ட அவரும் முன்பு சனத்குமாரருக்கு அருளியவாறு பிருகத்ஜாபாலோபநிடதத்தில் சுருக்கமாகக் கூறலுற்றார். அழித்தற்றொழிலை நடத்திவிட்டு நெற்றிக்கண்ணை மூடின சதாசிவரின் அகக்கண்ணினின்றும் தோன்றியதால் ருத்ராக்ஷம் (ருத்ரன் = சதாசிவன்; அக்ஷம் = கண்) எனப் பெயர் பெற்றது.

உருத்திராக்கத்தைப் பற்றி விரிவாகக் கூறும் உபநிடதத்திற்கு 'ருத்ராக்ஷ ஜாபாலோபநிஷத்' என்று பெயர். அதிலும் காலாக்னிருத்திரர் கூறுகின்றார் — 'முப்புரம் எரிந்தபோது கண்களை மூடினேன். அவற்றினின்றும் நீர்த்துளிகள் பூமியில் விழுந்தன. அவையே ருத்ராக்ஷங்களாக ஓங்கி வளர்ந்தன. உருத்திராக்கத்தின் வேர் பிரம்மா, தண்டு விஷ்ணு, மேற்பகுதி ருத்திரன், அதில் உள்ள பிந்துக்கள் சகல தேவதைகளும் ஆவர்.

உருத்திராக்கத்தில் நான்கு ஜாதிகள் உண்டு. வெண்ணிறமுடையவை பிராமண சாதியைச் சார்ந்தவை; செந்நிறமுடையவை அரசினர் சாதியைச் சார்ந்தவை; மஞ்சள் நிறமுடையவை வைசிய சாதியைச் சார்ந்தவை; கருநிறமுடையவை சூத்திர சாதியைச் சார்ந்தவை. அந்தந்த வருணத்தைச் சார்ந்தவர்கள் ஏற்ற நிறத்தோடு கூடிய உருத்திராக்கங்களை அணிதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒத்த அளவினதும், பெரியதும், திடமானதும், முட்களோடு கூடியதுமான உருத்திராக்கம் அணியத்தக்கது. பூச்சி கடியுண்டது, வெட்டுண்டது, உடைந்தது, முட்களற்றது, வடுவுற்றது, பொருந்தாதது இவை விலக்கத்தக்கன. இயல்பாகத் துவாரம் அமையப்பெற்றது உத்தமம். பட்டுக் கயிற்றில் கட்டி இவற்றை அணியலாம். தங்கச் சரடு அல்லது வெள்ளிச் சரட்டிலும் கோத்து அணியலாம். உரைத்துப் பார்த்தால் தங்கரேகை தோன்றக்கூடியது. சிவபூசை செய்வோருக்கு ஏற்றது. உருத்திராக்கத்தின் இடையிடையே பவழம், படிகம், பொன் இவைகளைக் கோத்தும் அணியலாம். இவையன்றி வில்வப்பழ ஓட்டையும் சேர்க்கலாம். உருத்திராக்கம் வில்வப்பழத்தின் அளவாயின் உத்தமம்; நெல்லிக்கனியின் அளவாயின் மத்திமம்.

உருத்திராக்கங்களுள் ஒன்று முதல் பல முகங்கள் கொண்டவை உள. ஒவ்வொன்றுக்கும் அதிதேவதையும் அதை அணிவதன் பயனும் ருத்ராக்ஷஜாபாலோபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது.

முகம்	அதிதேவதை		பயன்
1	பரதத்துவம்	—	பரதத்துவத்தில் லயம்
2	அர்த்தநாரீசுவரர்	—	அர்த்தநாரீசுவரப் பிரீதி
3	முத்தீ	—	அக்கினிப் பிரீதி
4	நான்முகன்	—	நான்முகப் பிரீதி

5	பஞ்சப்பிரம்மம்	—	நரனைக்கொன்ற பாப நீக்கம்
6	கார்த்திகேயன் அல்லது விநாயகன்	—	ஐசுவரியம், ஆரோக்கியம், கலையறிவு, மெய்யறிவு
7	ஏழு மாதர்கள்	—	ஐசுவரியம்; ஆரோக்கியம், ஞானம், தூய்மை
8	எட்டு மாதர்கள்	—	எட்டு வசுக்களின் பிரீதி
9	ஒன்பது சக்திகள்	—	ஒன்பது சக்திகளின் பிரீதி
10	யமன்	—	சாந்தி
11	பதினேரு உருத்திரர்கள்	—	சௌபாக்கியம்
12	மகா விஷ்ணு	—	பன்னிரண்டு சூர்யர்களின் ஒளி
13	காமன்	—	விரும்பியவற்றைப் பெறுதல்
14		—	நிலைத்த ஆரோக்கியம்

'சதாசாரவர்ணனம்' என்ற ஸ்மிருதிப் பகுதியில் அதிதேவதை, பயன் ஆகியவற்றைக் கூறுமிடத்து சிற்சில மாறுதல்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 1 முகம்—சிவன்—பிரம்மஹத்தி தோஷ நீக்கம்; 4 முகம்—பிரமன்—நரஹத்தி தோஷ நீக்கம்; 5 முகம்—உருத்திரன்—பிறன்மனை விழைதலாகிய தோஷ நீக்கம்; 9 முகம்—பைரவர்—புக்தி, முக்தி; 10 முகம்—ஜனார்த்தனர்—பிசாச தோஷ நீக்கம் என்றவாறு.

நாள்தோறும் காலையில் எழுந்து நீராடி உருத்திர சூக்தம்ஜபித்துக்கொண்டே உடலைத்துவட்டி, துவைத்து உலர்ந்த ஆடையை அணிந்து, எழுஞாயிற்றைத் தியானம் செய்து, நீறணிந்து உருத்திராக்கத்தைக் கீழ்க்கண்டவாறு அணிதல் வேண்டும் என்று விதிக்கப்பட்டுளது.

உருத்திராக்கத்தை அணிவதால் ஏற்படும் பயன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உபநிடதங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. உருத்திராக்கத்தைக் காண்டலே புண்ணியம்; அணிவதால் புண்ணியம் மிகும்; அணிந்து கொண்டு ஜபம் செய்வதால் அதனினும் மிக்க புண்ணியம். அதை அணிய வேண்டிய இடமும் எண்ணும் ருத்ராக்ஷ ஜாபாலோபநிஷதத்தில் கீழ்க்காணுமாறு கூறப்பட்டுள்ளது. சிகையில் ஒன்று, தலையில் முந்நூறு, கழுத்தில் முப்பத்தாறு, புஜம் ஒவ்வொன்றிலும் பதினாறு, மணிக்கட்டில் பன்னிரண்டு, தோளில் ஐந்நூறு (பதினைந்து?), உபவீத முறையில் மார்பில் நூற்றெட்டு, கழுத்தில் 2, 3, 5 அல்லது 7 சரங்கள் உருத்திராக்கங்களின் எண் முந்நூறுக்குட்பட்டிருந்தால் அதமம். ஐந்நூறு வரை மத்யமம். ஆயிரம் வரை உத்தமம். உண்ணும்போதும் உறங்கும்போதும்கூட உருத்திராக்கத்தை அணிந்திருத்தல் வேண்டும்.

பிருகஜ்ஜாபாலோபநிஷத்தில் உருத்திராக்கங்களின் எண் வேறுபட்ட முறையில் கூறப்பட்டுள்ளது. தலையில் 40 முடியில் 1 அல்லது 3, காது ஒவ்வொன்றிலும் 12, கழுத்தில் 32, புஜம் ஒவ்வொன்றிலும் 16, மணிக்கட்டு ஒவ்வொன்றிலும் 6, கட்டை விரல் ஒவ்வொன்றிலும் 6. நாள்தோறும் சந்தியா காலத்தில் 'அக்னிர் ஜ்யோதிர் ஜ்யோதிரக்னி: ஸ்வாஹா, சூர்யோ ஜ்யோதிர் ஜ்யோதிஸ் சூர்யா : ஸ்வாஹா' என்று மந்திரத்தை ஜபித்துக் கொண்டு நெய்யை விட்டு ஓமம் செய்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

உருத்திராக்கத்தைப் பற்றிப் பேசுவோருக்குப் பத்துப் பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டு. அதைக் கையில் ஏந்துபவருக்கு ஈராயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டு. அதைக் காதில் அணிபவருக்குப் பதினோராயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டு. அதைத் தலையில் அணிபவருக்குக் கோடி பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டு என்றும் அவ்வுபநிடதம் கூறுகின்றது.

உருத்திராக்கத்தைத் தலையில் அணியும்போது ஈசான மந்திரத்தையும், கழுத்தில் அணியும்போது தத்புருஷத்தையும், கழுத்திலும் மார்பிலும் அகோரத்தையும், கைகளில் அகோரபீஜ மந்திரத்தையும் உச்சரித்தல் வேண்டும். உருத்திராக்கத்தில் மத்தியில் உள்ள வெளியில் அகரம் முதல் க்ஷகாரம் ஈருக உள்ள ஐம்பத்தோரு அக்கரங்களையும் அமைத்து, பஞ்சாக்கர மந்திரத்தை உச்சரித்துப் பிராண பிரதிஷ்டை முதலானவற்றைச் செய்து அவற்றை அணிதல் முறை.

கிரகண காலம், சங்கிராந்தி, உத்தராயனம், தக்ஷிணுயனம், பௌர்ணமி, அமாவாசை ஆகிய புண்ணிய காலங்களில் அணிவதால் எல்லாத் தீவினைகளும் அகலும்.

உடலுக்கு நன்மை பயக்கும் சில பொருள்கள் உருத்திராக்கத்தில் உளவென்றும், இதனை உறைத்து மருந்துடன் கலந்து பருகினுல் பல நன்மைகள் உண்டாம் என்றும் மருத்துவர் கூறுவர்.

'இலங்கு மாமணி உருத்திர அக்கம்ஒன் றணியில்
விலங்கெ யிற்றுவெம் பூதங்கள் முதலிய மேவா'

என்றபடி உருத்திராக்கம் அணிபவர்க்கு இன்னல்கள் இல்லையாம் என்பது பெறப்பட்டது.

மதிப்புரை

"திருமாகறல் தேவாரம்" என்ற திருப்பானந்தாள் காசி மடத்து வெளியீடு வரப்பெற்ருேம். இது, திருமாகறலில் தேவாரத் தொடக்க விழாவும் அத் தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழாவும் நிகழ்ந்த 7—11—1965 அன்று வெளியிடப் பெற்றது. இத் திருமாகறல் தேவாரப் பதிகத்தை "வினை தீர்க்கும் பதிகம்" என்றும் ஆன்ருேர் கூறுவர். வினையை அவரவர் தம் பிறவிகளில் அனுபவித்துத் தீர்க்க வேண்டியதே. ஆனுல் வினையின் நீங்கிய பெருமானின் திருவருள் திறம் இருக்குமேல் வெய்ய வினையிரண்டும் வெந்தகன்று விடும் என்பது நூற்றுணிபு. அப்படியே இப்பதிகத்தை ஓதியே சேலம் சுப்பராய பிள்ளை என்ற பெரியார் நற்பேறடைந்தமை நம்மனேர் கண்முன்னர்க் கண்ட சிறந்த அதிசயமாகும். ஆகவே இது போன்ற திருப்பதிகங்களை நாம் ஓதி உய்ய வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். கிடைக்குமிடம் :—காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம்.

இது இலவச வெளியீடு ஆகும். (அம்பை)

சிவபூசை

(M. P. தியாகராஜன், B.A.)

பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப் போற்றிசைத்துப் பூசை
[செய்து
கையினுல் எரியோம்பி மறைவளர்க்கும் அந்தணர்தம் கருப்ப
[றியலூர்க்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயில்ஆலுங் கொகுடிக்
கோயில்
ஐயனைஎன் மனத்தினுல் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே.

சைவ சமயத் தோத்திர நூல்களாய பன்னிரண்டு திருமுறைகளுள் ஏழாந்திருமுறையாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளியுள்ள திருப்பாட்டிலுள்ள பாடலிது. இதில் சிவபூசையைப்பற்றிய விளக்கம் கூறியுள்ளது. பன்னிரண்டு திருமுறைகள் வெறும் தோத்திரப் பாடல்களாக அமையாது சாத்திரக் கருத்துகளையும் விளக்கியுள்ளன. இப்பாட்டில் சிவபூஜைக்கு அங்கமாயுள்ளவை அர்ச்சனை, எரியோம்பல், மறைவளர்த்தல் எனக் கூறப்படுகிறது. அந்தணர் என்போர் இவற்றைச் செய்ய வேண்டுமென்றும் உணர்த்தப்படுகிறது.

பொடி பூசுதல் என்பது திருநீறணிதலாகும். பொன், வெள்ளித் துண்டுகளை இணைக்கப் பொடி வைத்துப் பத்த வைப்பார்போல் இறைவனையும் உயிரையும் இணைப்பது இத்திருநீறணிதலாகும். எல்லாச் சமயங்களும் இது போன்று சின்னங்களுடையன எனினும் இது சிறப்புடையதாகும். ஏனெனில் இதுவே நிலையாமையை உணர்த்தும் சின்னமாகும். நிலையாமையை உணர்ந்தாலன்றிப் பொருள் பற்று நீங்காது. பொருள் பற்று நீங்கினல்லால் உண்மைப் பற்று வாராது. சத்திய வாழ்வில் தான் ஒழுக்கம் அமையும். நிதி அலுவலகத்தில் வேலை பார்ப்போர் பொருள் பற்று வைப்பாராகில் வேலைக்கே ஆபத்து நேரிடும். மற்ற வேலைகளில் நடக்கும் கையூட்டு முதலிய ஊழல்களுக்குக் காரணம் உண்மை இன்மையே

யாகும். நிலையாமையை உணர்ந்து பொருள் பற்று நீங்குமாயின் ஒழுக்க ஈனங்கள் ஏற்படுவதற்கு இடமிராது. மற்றும் "சாந்தம் ஈதென்றெம் பெருமானணிந்த நீறு கொண்டார் இடர்களையாய் நெடுங்களமேயவனே" என்று திருஞானசம்பந்தர் பாடியிருத்தலால் சாந்தத்தின் சின்னம் திருநீறு எனக்கொண்டு திருநீறணிதல் வேண்டும். அமைதியான வாழ்க்கையில்தான் இன்பம் காண முடியும்.

திருநீறு பூசுவானேன்? அதனுடைய தத்துவம் நினைவிலிருந்தால் மட்டும் போதாதா என்று கூறலாம். திருஞானசம்பந்தர் கொடுத்த திருநீற்றைப் பாண்டி மன்னன் முழுதும் அணிந்தபோது "மன்னவன் அணிந்தானென்று மதுரை வாழ்வார் அனைவரும் திருநீறணிந்து கொண்டார்களென்று சேக்கிழார் பெருமான் கூறுகிறுர். எனவே திருநீறணிதல் அணியாதவர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்ற நன்மையைக் கருதி அணிதல் வேண்டும்.

"அர்ச்சனை பாட்டேயாகும்." "போற்றிசைத்துப் பூசை செய்து" என்று கூறியிருத்தலால் "போற்றி" "போற்றி" யென்று திருத்தாண்டகங்கூறி அர்ச்சித்தலின் பெருமையை உணரலாம். அதுவே சிறப்புடைய அர்ச்சனையென்று திருஞானசம்பந்தர் பாடியுள்ள ஒரு பாடல் விளக்கியுள்ளதைக் காணலாம். அப்பாடலாவது

"செழுந்தண் மால்வரை யெடுத்தசெறுவலி இராவணன்அலற
அழுந்தவூன்றிய விரலான் போற்றியென்பார்க்கல்ல தருளான்
கொழுங்க விசுமந் துந்திக்குளிர்புனல் நிவாமல்குகரைமேல்
அழுந்துஞ் சோலைநெல்வாயில் அரத்துறையடிகள் தம்அருளே.

அதுபற்றியே திருநாவுக்கரசர் ஐந்து போற்றித்திருத்தாண்டகங்கள் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் "போற்றித் திரு அகவல்" என்றே பாடியருளியுள்ளார். அவற்றைச் சிவபூசைக்குப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இவ்வாறும் வாரத்தில் ஆறு நாட்களுக்கு அமைத்துக் கொள்வோமாயின் ஏழாம் நாள் சனிக்கிழமைக்கு

''தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கராபோற்றி'' என்று தொடங்கும் திருவாசகப் பதிகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எரியோம்புதல் இரண்டு விதமாகச் செய்து வந்துள்ளதாகக் காண்கிறோம். ஒன்று விலங்குகளை இரையாக்கி வேள்வி செய்வது. மற்றொன்று சாத்வீக வேள்வியாகும், எரியோம்புதல் புறத்தே இறைவனைச் சோதி வடிவினனாகக் காணும் பாவனையில் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அது உள்ளொளி நாட்டத்திற்கு உறுதுணையாக அமைந்து கொள்ளவும் கூடும். ஆலயங்களில் பல கிளைகளோடு கூடிய தீபத்தைக் காட்டும்போது அனைவரும் கைகூப்பி அரகர கோஷத்துடன் கும்பிடுவதைக் காண்கிறோம். இறைவனைச் சோதி வடிவினனாகக் காண விழைவதையே அது காட்டுகிறது.

மறைவளர்த்தலென்பது அஞ்செழுத்தோதுதலேயாகும். அது தியானத்தின்பாற்படும். பூசைக்கு முடிவில் அஞ்செழுத்தோதி அக்குமாலை கொண்டு அங்கையிலெண்ணுதல் ஒரு அங்கமாகும். அப்படி மனனம் செய்தல், பைசந்தி வாக்கு எழும் இடத்தினின்று ஓதுதல், வைகரி வாக்கைச் சுத்தப்படுத்தும். நாம் பேசும் பேச்சே வைகரி வாக்காகும். அது இனிமையாகவும் சுத்தமாகவும் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட வாக்கினாலே சொல்லும் தோத்திரங்களே நன்மை பயக்கும். திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் 'புனிதவாய் மலர்ந்து அழுத பாடல்கள்' எனச் சேக்கிழார் கூறுவதைக் காணலாம். எனவே அவர் பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளனவாகும். சொல் தவறுதல் தூய்மைக் கிழுக்கென்று ''சுந்தரமூர்த்தி நாயனார் கண்ணிழந்து வருத்தமடைந்ததைக் காண்கிறோம். ஏசுநாதரும் வாயின் உள்ளே செல்லும் உணவுப் பொருள்கள் அசுத்தமாக இருந்தாலும் வாயில் வெளிவரும் சொற்கள் அவ்வாறு இருத்தல்கூடாது; தூய்மையாக இருத்தல் வேண்டும்'' எனக் கூறியுள்ளார். சத்தியம் தவறின் உயிர் வாழா நாயன்மார்களே இன்று ஆலயங்களில் வைத்துப் பூசிக்கத்

தக்கவர்களாயுள்ளார்கள். எனவே வாக்குச் சுத்தமடைய அஞ்செழுத்தெண்ணி ஓதுதல் வேண்டற்பாலதாகும். அது மறைவளர்த்தலென இப்பாடலில் கூறப்படுகிறது. "பொய்யாத வாய்மையால் பொடி பூசி" என்றே இப்பாடலும் தொடங்கியிருத்தல் காண்க."

இறுதியில் உள்ள "ஐயனை என் மனத்தில் நினைந்த போதவர் நமக்கினியவாறே" என்ற தொடர் பூசை செய்யும்போது நினைவில் கொள்ள வேண்டுவதொன்றாகும். நம்மை ஈடேற்றும் மனமே நம்மனமாகும். பொருளையோ நம் குறையையோ நினைந்து பூசிப்பது நம் மனமாகாது. பொருளைக் கருதியோ வேறு நலனைக் குறித்தோ இறைவனை எண்ணுதல் இன்பத்தைத் தரக்கூடிய நினைப்பாகாது. இறைவன் நமக்கினியனாக ஆகவேண்டுமெனின் அவனையே வேண்டி நினைக்கும் மனம் பெறுதல் வேண்டும். அதுவே நம்மை ஈடேற்றும் மனமுமாகும்.

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்."

என்ற குறள் இதற்குச் சான்றாகும். "சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே" என்று திருஞானசம்பந்தர் கூறும் அனுபவம் வேறொன்றைப்பெற அவனை நினைதலால் ஏற்படக்கூடியதன்று. எனவே பூசை செய்யும்போது அவனையே வேண்டிச் செய்யும் பூசையால்தான் அவனை நமக்கினியவனாக உணர முடியும். எனவே அவனைத் தன் மனத்தினால் நினைந்து பூசிக்க வேண்டுமென்றார்.

இத்தகைய இவ்வருமையான பாடலின் கருத்தை நினைந்து நாம் ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் நன்று.

உ

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

சைவத் தேர்வு வினாக்கள் - 1965

—: ✶ :—

சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

காலம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு : (1) ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் உட்பிரிவை விடுக.

(2) எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

(3) விடைகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

1. (அ) சார்பெழுத்துக்கள் எத்தனை? அவை ஒரு மொழியிலும் தொடர் மொழியிலும் இடம் பெறுதலை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

(ஆ) அளத்தலின் வகைகளையும் அவற்றுள் எழுத்திற்கு மாத்திரை கோடல் எதன் பாற்படும் என்பதனையும் விளக்குக.

(இ) "குற்றிய லுகரக் கின்னே சாரியை"

"குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை"

—என ஒரு விதியை இருவிடங்களில் கூறியது ஏன்? ஆராய்க.

(ஈ) செய்யுளுக்கே உரிய சில விதிகளும் புணர்ச்சி விதியுள் கூறப்பட்டுள்ளன என்பதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

(உ) அக்கு, இக்கு என்னும் சாரியைகள் புணர்ச்சிக்கண் எவ்வாறு விகாரமடையும்? உதாரணம் தந்து விளக்குக.

(ஊ) அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி வரும் எழுத்துகள் யாவை? உதாரணம் தருக.

(எ) பொருள் வேற்றுமை காரணமாகப் புணர்ச்சிகள் வேறுபடும் என்பதற்கு இரண்டு சான்றுகள் தருக.

2. (அ) "என்மனார்" என்பது பற்றிச் சேனாவரையர் கூறும் இலக்கணக் குறிப்பு யாது? அவர் உரையாசிரியர் கூற்றை எவ்வாறு மறுக்கின்றார்?

(ஆ) தகுதி, வழக்கு—இவைபற்றிய சேனாவரையர், உரையாசிரியர் கருத்துகளை விளக்குக.

(இ) "பன்னிரு கையும் பாற்பட இயற்றி"—இஃது எவ்விதிக்கு எடுத்துக்காட்டாக வந்துள்ளது? தடை விடைகளான் விளக்குக.

(ஈ) கருமச்சார்பு, கரும மல்லாச்சார்பு—எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(உ) வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய—இதன் பொருளை விளக்குக.

(ஊ) 'தொகை' என்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் கூறும் பொருள்களை எழுதுக.

(எ) விளை வேறுபடும் பல பொருள் ஒரு சொற்கள் எவ்வாறு தெளிவாகப் பொருளைக் காட்டும்?

3. (அ) அறம் காரணமாகப் பிரியும் பிரிவுபற்றி விளக்கம் தருக.

(ஆ) விரிச்சி, வெறியாட்டு, மன்னைக் காஞ்சி —விளக்குக.

(இ) அகத்திற்கே உரியனவாக ஓதப்பட்ட மெய்ப்பாடுகள் யாவை?

(ஈ) உள்ளுறை உவமம் பற்றித் தொல்காப்பியனர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

(உ) களவியல், பொருளியல் என்னும் தலைப்புகளுக்கு இளம்பூரணர் தரும் விளக்கம் யாது?

(ஊ) பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினர் என்றல் பொருந்தாமைக்கு உரையாசிரியர் தரும் காரணங்கள் யாவை?

(எ) அழிவில் கூட்டம் என்பது யாது? அதன் வகைகள் யாவை? அவைகளுள் ஒன்றனை விளக்குக.

4. (அ) மங்கலம் இனிது முடிதற்குக் காரணமன்று, மங்கலங் கூறிய வழியும் நன்னூல் முதலிய வற்றின் முடிவு காணுமையின், மங்கலங் கூருத வழியும் தொல்காப்பிய முதலியவற்றின் முடிவு காண்டலின் உடன்பாட்டினும் எதிர்மறையினும் நியமந் தப்புதலின்—இதன் பொருளை விளக்கி, ஆசிரியர் தரும் விடையினையும் குறிப்பிடுக.

(ஆ) இலக்கணையின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(இ) வேத வாக்கியப் பொருளுணர்விற்குக் காரணங்கள் யாவை? விளக்குக.

இலக்கியம்

மணி 3] [மதிப்பெண் 100

குறிப்பு : 1. ஒவ்வொரு வினவிலும் ஒவ்வொரு உட்பிரிவை விட்டுவிடுக.

2. எல்லா உட்பிரிவுகளுக்கும் மதிப்பெண் சமம்.

I 1. திலகவதியம்மையார் சைவர்களால் போற்றத் தக்கவர் என்பதற்குரிய சான்றுகள் 3 தருக.

2. சேக்கிழார் சுவாமிகள் தேவாரப் பாக்களை அடியொற்றியே நாயன்மார் வரலாற்றை யெழுதியுள்ளார் என்பதற்கு இரு சான்றுகள் திருநாவுக்கரசர் புராணத்திலிருந்து தருக.

3. "கால நிலைமையா லுங்கள் கருத்தில் வாட்டமுறீர்"—இடஞ்சுட்டி விளக்குக.

4. அமணர்களால் தான் பட்ட துன்பங்கள் பற்றி அப்பர் கூறும் அகச்சான்றுகள் 3 தருக.

5. அப்பர் பெருமான் முத்தி நிலை பற்றி அறிந்ததை வரைக.

II 1. சம்பந்தர் தேவாரத்திற்கும் அப்பர், சுந்தரர் தேவாரங்களுக்குமுரிய வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

2. சம்பந்தர் அவ்வவ்வூர்களிலுள்ள அடியவர்களை யும் தம் பாக்களில் பாடிப் போற்றியதற்கு இரு சான்றுகள் தருக.

3. சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே

இப்பாட்டின் கண் நீவிர் காணும் நயங்களையும் சிறப்புக்களையும் விளக்கி எழுதுக.

4. சம்பந்தர் மங்கையர்க்கரசியாரை எவ்வாறு போற்றிப் புகழ்கிறார்?

III 1. "பால் நினைந்தூட்டும்" என்ற செய்யுளில் காணும் சைவ சித்தாந்தக் கொள்கைச் சிறப் பினை விளக்கி எழுதுக.

2. எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந் தது எது? எவ்வாறெனை விளக்குக.

3. திருச்சதகத்தின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

4. திருவாசகத்தில் காணும் உவமைகளுள் இரண்டு கூறி அவை நம் சமய சம்பந்தமாக அறிவுறுத் தும் விளக்கங்களையும் விளக்குக.

IV 1. திருவிசைப்பா ஆசிரியர்களுள் நீவிர் சிறப் பாகக் கருதத்தக்கார் ஒருவரைக் கூறிக் கார ணங்களும் தருக.

2. அகப்பொருட்டுறை தழுவிய திருவிசைப்பா ஒன்றினை யெழுதி அதன் சிறப்புக்களையும் எழுதுக.

3. திருப்பல்லாண்டுச் செய்யுள்களி னின்றும் இறைவன் பெருமைகளுள் நான்கினைக் குறிப்பிடுக.

சாத்திரம்

மதிப்பெண்: நூறு] [காலம்: மூன்று மணி

குறிப்பு: எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம். எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. சிவஞானபோதச் சிற்றுரையிற் சிவஞான முனிவரின் நுண்ணிய உரைத்திறனை விளக்க எவையேனும் இரண்டு சான்றுகள் தருக.

2. ஆசிரியர் மெய்கண்டார் கூறும் உவமைகளுள் எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டு, இடம் சுட்டி விளக்குக.

3. யோக நூலார் கூறும் நால்வகைப் பாவனைகள் யாவை? அவற்றை மெய்கண்டார் எங்ஙனம் மறுத்துள்ளார்?

4. "அஞ்ஞான அச்சகலர்க்குக் குருவாதல் உபசாரமன்று உண்மையே" என்பதனை மெய்கண்டார் எங்ஙனம் அறிவுறுத்துகின்றார்?

5. முதல்வனை இதய பங்கயத்திற் கண்டு அர்ச்சிக்கு மாற்றினைச் சிவஞான போதம் எவ்வாறு விளக்கியுள்ளது?

6. சிவஞான போதத்தை முழுவதும் தழுவியே சிவஞான சித்தியார் இயன்றுள்ளது என்பதற்கு ஒரு சான்று தருக.

7. ஆர்ப்பாய காயந் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாற்றினை அருள்நந்தி சிவம் எவ்வாறு விளக்கி யுள்ளார்?

8. ஆன்மாவிற்குச் சகல நிலையில் உள்ளனவும், கேவல நிலையில் இல்லாதனவும் ஆகிய பத்துச் செயல் கள் யாவை?

9. காணும் உபகாரம், காட்டும் உபகாரம் என்பன எவை? இவை எவ்வெச் சூத்திரங்களினால் விளக்கப் பெற்றன?

10. பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என்பன வற்றின் இயல்பினைச் சித்தியார் எங்ஙனம் விளக்கி யுள்ளது?

11. 'நிறுத்திடுவன் நினைந்த உரு நிமலன் தானே' என்பதற்குச் சிவப்பிரகாசம் கூறும் ஆறு காரணங்கள் யாவை?

12. திரோதாயி சத்தியின் செயல் யாது? அதனை யும் மலம் என்று கூறுவது ஏன்?

13. இறைவனே உலகுக்கு உபாதானம் என்பவர் கொள்கையினைச் சிவப்பிரகாசம் எவ்வாறுமறுக்கின்றது?

14. மாயாவாதியின் கொள்கையினையும், அதன் மறுப்பினையும் சுருக்கி வரைக.

உரைநடை

மணி 3] [மதிப்பெண் 100

குறிப்பு : எல்லா வினக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சைவ சித்தாந்தக் கொள்கை பிற சமயக் கொள்கைகளை விட பகுத்தறிவிற் கேற்பச் சிறப் புடைத்தாயுள்ளது என்பதற்கு 3 சான்றுகள் தருக.

2. சிவஞான போதத்தின் விளக்க நூலே சிவஞான சித்தியார் என்பதற்கு ஓரிடம் காட்டி விளக்குக.

3. திருக்குறள் ஒரு சைவ சித்தாந்த நூல்—மூன்று காரணங்கள் தருக.

4. சிவஞான முனிவர் உரைநடை நூல்களில் நீவிர் போற்றும் தலையாயது எது? காரணங்கள் தருக.

5. பூசலார் நாயனர் வரலாற்றில் காணப்பெறும் சிறப்புகளை எழுதுக.

இளஞ் சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

மணி 3] [மதிப்பெண் 100

குறிப்பு :—(1) எல்லா உட்பிரிவுகட்கும் மதிப்பெண் சமம்.

(2) ஒவ்வொரு வினவிலும் இரண்டு உட் பிரிவுகளை விட்டு விடுக.

1. (அ) ஒரு நூலுக்கு எவ்வெம் முறைபற்றிப் பேரிட லாம்? ஏதாவது நான்கினுக்கு எடுத்துக்காட்டு கள் தருக.

(ஆ) மையீற்றுப் பண்புப் பெயர்ச் சூத்திர விதிகளுக்குச் சான்றுகள் தந்து புணர்த்திக் காட்டுக.

(இ) உம்மை இடைச்சொல் எவ்வெப் பொருள்களைத் தரும்? சான்றுகளும் தருக.

(ஈ) செய்யுள் விகாரங்கள் எத்தனை வகைப்படும்? அவற்றிற்குச் சான்றுகள் தந்து விளக்குக.

(உ) வினையெச்ச வாய்பாடுகள் யாவை? விளக்கி வரைக.

(ஊ) பின் வருவனவற்றுள் எவையேனும் ஐந்தினைப் பிரித்தெழுதி விதி கூறிப் புணர்த்திக் காட்டுக:

கஃறீது, தெம்மன்னர், இற்றை நாள், தேக்குடம், அங்கை, சேதா, களிற்றியானை, புளிஞ்சோறு.

(எ) கீழ்க்காண்பவைகளைப் பிரித்துப் பொருள்கூறி இலக்கணக் குறிப்பும் தருக:—

முந்நூறு, முன்னூறு; அலர் கொன்றை, அலர்க்கொன்றை; எண்ணை, எண்ணெய்.

2. (அ) செந்தொடையி னிலக்கணம் கூறி, சான்றும் தருக.

(ஆ) குறட்டாழிசை வரும் விதங்களை விளக்குக.

(இ) "அஉ மறியா அறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ"

இச் செய்யுட் பகுதி எதற்கு எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது? விளக்குக.

(ஈ) "ஒப்புங் குறிக்கொள் பொலங் கொடியே"

இவ்வடியுள் ஒப்பும் என்பதனால் பெறப்படும் சிறப்பியல்பென்னை?

3. (அ) இரண்டுநெறியாரும் ஒத்துக்கொள்ளும் குணங்கள் யாவை? ஏதாவது ஒன்றினை விளக்குக.

(ஆ) "வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை"

இது எவ்வணியின் பாற்படும்? விளக்குக.

(இ) வேற்றுப் பொருள் வைப்பணி பற்றி விளக்கி அதன் வகையுள் ஒன்றற்குச் சான்றும் தருக.

(ஈ) எதிர் நிரனிறையணி பற்றிச் சான்றுடன் விளக்கு.

(உ) "உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு"

இது எவ்வணியின் பாற்படும்? விளக்குக.

இலக்கியம்

மணி 3] [மதிப்பெண் 100

I கீழ் வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக:—

1. இயற்கைக் காட்சிகளை விளக்கிக் கூறுவதில் நக்கீரர் திறமை மிக்கவர் என்பதற்குத் திருமுருகாற்றுப் படையினின்று சான்றுகள் காட்டிப் புலப்படுத்துக.

2. திறக்குறளில் கடவுள் வாழ்த்தில் கூறப்பட்டுள்ள இறைவனின் இலக்கணங்கள் யாவை?

3. ஈகையின் சிறப்பினைத் திருவள்ளுவர் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

4. சுந்தரர் தேவாரத்தில் அடியார் கூட்டுறவின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

5. சுந்தரர் திருவாக்கின்படி நாம் சிவபெருமானை எவ்வெம் முறைகளில் வழிபட வேண்டும்? அவ்வாறு வழிபட்டால் நமக்குக் கிடைக்கும் பயன்கள் யாவை?

6. முருகப்பெருமானின் திருமுகங்களின் செயல்கள் பற்றி நக்கீரரும் குமரகுருபர சுவாமிகளும் கூறியவற்றை ஒப்பிட்டுக் காட்டுக.

7. முருகப்பெருமானின் வியக்கத்தக்க அருட்செயல்களாகக் கந்தரனுபூதியில் குறிக்கப்பட்டுள்ளவை யாவை? 40

II கீழ் வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை தருக:—

1. திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் வெற்றிச் சிறப்பு எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?

2. இல்லறத்தினும் துறவறமே சிறப்புடையது என்பதனைத் திருவள்ளுவர் எவ்வெவ்விடங்களில் குறிப்பானும் வெளிப்படையானும் சுட்டிக் காட்டியுள்ளார்?

3. அருள் பிறத்தற்குரிய வழியும் அருள் இல்லாதார்க்கு வரும் குற்றங்களும் யாவை?

4. சுந்தரர் தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ள நாயன்மார்களுள் ஐவர் பெயர்களைக் குறிப்பிட்டு அவருள் எவரேனும் ஒருவர் ஆற்றிய அருந்தொண்டினைக் குறிப்பிடுக.

5. சுந்தரர் தேவாரத்திலிருந்து அவலச் சுவைக்கு இரு சான்றுகள் காட்டி விளக்குக.

6. கந்தர் கலிவெண்பாவில் கூறப்பட்டுள்ள சிவ பெருமானின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்துக.

7. கந்தரனுபூதியில் கூறப்பட்டுள்ளபடி நாம் முருகப்பெருமானை அடைவதற்குத் தடையாக உள்ளவை யாவை? விளக்கி வரைக. 32

III கீழ்க்காணும் திருக்குறளில் யாதானும் ஒன்றிற்குப் பரிமேலழகர் கூறியுள்ள விளக்கவுரையினைக் குறிப் பிடுக!

(a) சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(b) காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய். 7

IV கீழ்க்காணும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன? உவமப் பொருத்தத் தினையும் ஆராய்க.

(a) விண்பொரு நெடுவரைப் பரிதி.

(b) நீக்கமின்றி யாடி நிழலசைப்பான்.

(c) சுடச்சுடரும் பொன்.

(d) வன்பாற்கண் வற்றல்மரம் தளிர்த்தல்.

(e) புல்நுனைப் பனி வெங்கதிர் காணல். 9

V கீழ்க்காணும் பகுதிகளுள் மூன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் நயங்களையும் புலப்படுத்துக.

(1) இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்து.

(2) நன்னர் நெஞ்சத் தின்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.

(3) மகரக்குழையாய் மணக்கோலமதே பிணக்கோல
பிறவி யிதுதான். [மதாம்

(4) பேயோ டேனும் பிரிவொன்று இன்னா
தென்பர் பிறரெல்லாம்.

(5) கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசம்தர என்று இசைவாய்? 12

சாத்திரம்

மதிப்பெண்: 100] [காலம்: மூன்று மணி

குறிப்பு: எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம். எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. திருவுந்தியாரில் வரும் சில அழகிய தொடர்களைக் குறிப்பிட்டு, அவற்றின் பொருளையும் எழுதுக.

2. ஞானசிரியரின் பெருமை (அல்லது) சரியை கிரியை யோகங்களின் சிறப்பு, திருவுந்தியாரில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

3. வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டவர் யார்? அவர்கட்கு ஏறிய பித்து எது? தெளிவுறுத்துக.

4. திருவுந்தியாரைத் தழுவியே திருக்களிற்றுப் படியார் இயற்றப் பெற்றது என்பதற்கு ஒரு சான்று தருக.

5. திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் சிவசத்திகளின் இயல்பினை எங்ஙனம் விளக்கியுள்ளார்?

6. திருக்கடவூர் உய்யவந்த தேவர் பெரியபுராண வரலாறுகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பதற்குச் சான்று தருக.

7, 'உயிரவை நிலை' (அல்லது) 'உயிர் விளக்கம்' என்னும் தலைப்பில் திருவருட்பயன் விளக்கும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

8. திருவைந்தெழுத்தைப் பற்றித் திருவருட் பயன் கூறுவன யாவை? விவரிக்க.

9. திருவருட் பயனிற் போந்துள்ள உவமைகளுள் எவையேனும் இரண்டினைச் சுட்டி விளக்குக.

10. மனவாசகங் கடந்தார் வித்தியா தத்துவங்களின் பெயரையும் இயலையும் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

11. முத்திதனை அடைந்தோர் நிலைக்குக் கூறப்பெறும் உவமைகள் யாவை?

12. முத்தித் தலைவர் யார்? அவர் தம் செயல் யாது?

13. "அருவேல் உருவன் றுருவேல் அருவன்
திருவேறும் ஒன்றிற் கிடையா"

எனக் கூறி நிகழ்த்தும் வினவுக்குரிய விடை யாது?

14. "பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியே திரவேது"

என்னும் செய்யுட் பொருளைத் தெளிவுறுத்துக.

——

உரைநடை

மணி 3] [மதிப்பெண் 100

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சைவம் சமரசத் தன்மை கொண்டுள்ளது என்பதற்கு ஒரு சான்று தந்து விளக்குக.

2. "வாகீசர் சிறந்த மெய்யுணர் ஞானி" எவ்வாறு? இரண்டு சான்றுகள் காட்டி நிறுவுக.

3. பட்டினத்தார் வரலாறு மக்களுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை ?

4. தாயுமானவர், பட்டினத்தார் பாடல்களில் காணப்பெறும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்க.

5. சுந்தரர் காலத்து வாழ்ந்த நாயன்மார்களுள் ஒருவர் வரலாற்றை எழுதி அவருக்கும் சுந்தரருக்கும் ஏற்பட்ட தொடர்பினையும் விளக்குக.

6. மதுரையின் வேறு பெயர்கள் நான்கு கூறி அவற்றுள் ஏதாவது ஒன்றன் பெயர்க் காரணம் குறித்த விளக்கத்தினையும் எழுதுக.

ச மா ஜ வெ ளி யீ டு க ள்

	ரூ.	பைசா
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல்	0	40
பொன் விழா மலர் 0 50 அறப்பயிற்சிமாலை	0	50
குகார்ச்சனைத் திருமந்திரம்	0	06
சிவஞான சித்தியார் - சிவாக்கிரக யோகிகள் உரையுடன்	0	50
சிவலிங்க வழிபாடு	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
பிரதோஷ வழிபாடு	0	20
சிவஞான போதம்-எளிய உரையுடன் (சிறியது)	0	12
திருவெம்பாவை-உரையுடன் (சிறியது)	0	06
அறுபத்து மூவர்	0	05
நான் நம்புவன சில	0	07
விநாயகர் வழிபாடு	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞான போதம்—தெளிவுரையுடன்	0	50

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

சிறு நூற்றிரட்டு 1 25 சிவஞான தீபம்	0	50
சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் 1 50 செவியறிவுறூஉ	0	20
பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50

தபால்—ரயில் செலவு தனி.

"சித்தாந்தம்"—சிறந்த மாதப் பத்திரிகை
ஆண்டுச் சந்தா ரூ. 3. ஆயுள் சந்தா ரூ. 50.

கிடைக்குமிடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

முருகன் அச்சகம், சென்னை-14.

பிற செய்திகள்

சென்னைக்கடுத்த கோயம்பேட்டில் குசலவபுரீச்சுரர் கோயிலில் 14—11—65 மாலை சத்திநாயனார் விழா கொண்டாடப் பெற்றது. நம் சமாஜ உறுப்பினர்கள் வல்லை பால சுப்பிரமணியம் அவர்களும் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களும் சத்திநாயனார் பற்றிச் சொற்பெருக் காற்றினர்.

புரசைத் திருநெறிக் கழக 57—ஆம் திங்கள் வழிபாடு 21—11—65 ஞாயிறு மாலையில் சென்னை அமைந்தகரை வரசித்தி விநாயகர், ஏகாம்பரேச்சுர் திருக்கோயில்களில் சிறப்புற நிகழ்ந்தது.

திரு ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள் நூற்றாண்டு விழா 24—11—65 அன்று மாலை சென்னை தியாகராயநகர் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் கொண்டாடப் பெற்றது. திரு பிள்ளையவர்கள் வாழ்க்கை வரலாற்றினை திரு M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L., அவர்கள் வெளியிட்டார்கள் மேன்மைமிகு, நீதிபதி R. சதாசிவம் M.A., M.L., அவர்கள் தலைமையில் அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு நல். முருகேச முதலியார், சமாஜத் தலைவர் திரு G. M. முத்துசாமி பிள்ளை I. A. S. (ஓய்வு), திரு A. S. ஞானசம்பந்தம் M.A., திருமுறைக் காவலர் திரு அ. சோமசுந்தரஞ் செட்டியார் M.A., திரு ந. ரா. முருகவேள் M.A., M.O.L. ஆகியோர் பிள்ளையவர்களின் அருமை பெருமைகள் குறித்துப் பேசினர். திரு ஜெ. எம். நல்லசுவாமிப் பிள்ளையவர்கள் புகழ் நீடு மன்னுக.

மதிப்புரை

" திருச்சிக்கல் சிங்காரவேலர் திருப்பதிகம் " என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது 30—10—65 சஷ்டி விழாவின் போது திருச்சிக்கலில் வெளியிடப் பெற்றது. வாலாஜாபாத்து இந்துமத பாடசாலை அண்ணு திரு. நா. ப. தணிகையரசு அவர்களால் இயற்றப் பெற்றது. வாலாஜாபாத்து அப்பா திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் ஒவ்வொரு ஆண்டு சஷ்டியிலும் நோன்பிருப்பது வழக்கம். அது போன்று இவ்யாண்டு திருச்சிக்கல் சிங்காரவேலவர் திருமுன்பு நோற்றார்கள். அதன்பின் போற்று முகத்தான் இப்பதிகம் பாடப் பெற்றதாயுள்ளது. பத்துப்பாக்கள் உள்ளன. பாக்கள் யாவும் இனிமை பொருந்திய நடையுடையவாய்ப் பத்திச்சுவை பெற்றனவாய் உள்ளன. உள்குவார் உருகி ஓதியுணர்ந்து அவனை வழிபடின் இப்பதிகம் நன்னிலையடைய ஒருபடியா

யிருக்குமென்பது உறுதி. அன்பர்கள் பெற்றுப் பாடிப் பய னடைவார்களாக; விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்கு மிடம் :—திரு. நா. ப. தணிகையரசு, வாலாஜாபாத்து இந்து மத பாடசாலை, செங்கற்பட்டு மாவட்டம். (அம்பை)

"மணிவாசகர் மணிமொழிகள்" என்னும் வெளியீடு ஒன்று வரப்பெற்றோம். இது அரியலூர் மணிவாசக மன்ற இருபத்து இரண்டாம் ஆண்டு நிறைவு விழா மலராக வெளி யிடப் பெற்றது. இதில் 50 மணி மொழிகளைத் தொகுத்து விளக்கமும் எழுதியவர் தமிழ்ப் பெரும் புலவர் அ. நடேச முதலியார் ஆவார். திருவாசகத்துள் யாண்டும் மணி மொழி களே அமைந்துள்ளன. அம்மணிக் குவியல்களுள் ஒரு கைப்பிடி மணி மொழிகள் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. இதனைப் போன்று அளவற்ற மலர்கள் வாயிலாய்த் திருவாச கச் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டுவது சைவர்களின் தலையாய கடமையாம். இதன் ஆசிரியர் சிறந்த சமயப்பற்று டையர் ஆதலின் சமயக் கருத்துக்களை ஆங்காங்குச் சிறப்புற விளக்கிச் செல்வது போற்றத் தக்கது. கிடைக்குமிடம் :— மணிவாசக மன்றம், அரியலூர், திருச்சி மாவட்டம். விலை குறிப்பிடவில்லை. (அம்பை)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றை டிசம்பர் மாதம் 31—12—65க்குள் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி. யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத் தொகையினை தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. கே. இராமநாதன் செட்டியார், B. A., B. L., அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.